அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 318

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
17. டிசம்பர், 1985.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

வெளிநாட்டில் படிப்பதற்காக/தொழில் பார்ப்பதற்காக
அரசாங்க உத்தியோகத்தர்களுக்குச் சம்பளமற்ற விடுதலை-
புதிய தாபனக் கோவை அத்தியாயம்- X11

16.1.1 -ஆம் உபபிரிவை நீக்கிவிட்டு பின்வருவனவற்றைப் பதிவீடு செய்க.

"16.1.1 - சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட ஓர் அரசாங்க உத்தியோகத்தருக்கு வெளிநாட்டில் படிப்பதற்காக அல்லது தொழில் பார்ப்பதற்காக அல்லது இரண்டிற்குமாக (அதாவது படிப்பைத் தொடர்ந்து தொழில் பார்த்தல் அல்லது மறுதலையாக) அவரது சேவைக் காலத்தில் மொத்தம் ஐந்து ஆண்டு காலத்துக்கு சம்பளமற்ற விடுதலை அளிக்கப்படலாம். உறுதிப்படுத்தப்படாதுள்ள அல்லது தற்காலிகமாகவுள்ள ஓர் உத்தியோகத்தருக்கு படிப்பின் பொருட்டு மட்டும் இச்சலுகையளிக்கப்படலாம்.

16.1.2. - படிப்புக்காக வழங்கப்படும் தொடர்ச்சியான காலப்பகுதி மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாததாயிருக்கும் அதே வேளையில் தொழில் பார்ப்பதற்காக மட்டும் தொடர்ச்சியான காலப்பகுதி ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கப்படலாம்."

ஒப்பம்: டி.பி.ஐ.பீ.எஸ்.சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.